# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.294/2024

நாள்: 06.07.2026

வா.சா. 1 – காமராஜ்

2026–ம் ஆண்டு ஜுலை 06–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் சிங்காருவின் வாரிசுகளான ஜெயச்சந்திரன், கருணாநதி, ரவி, ராஜா ஆகியோர்களை தரப்பனர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் என் அப்பாவுடன் உடன் பிறந்த காவேரி, சரோஜா, சந்திரகலா ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வம்சாவளி பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பெங்களூருக்கு சென்ற பின்னர் சுமார் 20 வருடங்களுக்கு பின்பு தான் ஊருக்கு வந்தேன். நான் ஊருக்கு வந்த பிறகு அளந்தபோது தான் மாணிக்கம் பெயரில் பட்டா மாறியுள்ளது பற்றி தெரியவந்தது. தாவா சொத்தில் மாணிக்கம் வீடு கட்டி குடியிருந்து வந்து அவருக்கு பிறகு அவருடைய வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் மாணிக்கத்தை மட்டும் வீடு கட்டி தங்கிக்கொள்ள என் தந்தை அனுமதி அளித்திருந்தார். என்னுடைய தந்தை மாணிக்கத்திற்கு வீடு கட்டிக்கொள்ள அனுமதி அளித்தபோது என்னுடைய தாத்தா பக்கிரிசாமி உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். பக்கிரிசாமி இறப்பதற்கு முன்பே மாணிக்கம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பக்கிரிசாமி இறப்பதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கம்

இறந்திருப்பார் என்றால் தெரியாது. என்னுடைய தாத்தா, மாணிக்கம் ஓட்டுவீட்டில் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் மாணிக்கம் ஊனமுன்றவர் என்பதால் ஓட்டுவீட்டுக்கு பின்புறம் கூரை வீடு கட்டி தங்க வைத்திருந்தார். மாணிக்கம் இறந்தபிறகு அவருடைய வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. மாணிக்கம் இறந்த பிறகு  தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் குடியிருந்து வந்து அவர்கள் பெயரில் வீட்டுவரி இரசீது, குடிநீர் கட்டண இரசீது மற்றும் நத்தம் பட்டா ஆகியவை உள்ளது என்றால் என் தந்தை இறந்த பிறகு மாற்றியுள்ளார்கள். 1 வது அயிட்ட சொத்து 1 ¾ செண்ட்டு, 2 வது அயிட்ட சொத்து 2 செண்ட் இருக்கும். தாவா சொத்திற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை இரத்து செய்ய 5 ம் பிரதிவாதியிடம் எந்த ஆண்டு மனு கொடுத்தேன் என்றால் 2023 ஆண்டு கொடுத்தேன். 1 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று எப்போது கேட்டேன் என்றால் ஞாபகமில்லை. மாணிக்கம் உயிரோடு இருந்தவரை தாவா சொத்தை ஒப்படைக்க கூறி நானோ எனது தந்தையோ கேட்கவில்லை என்றால் சரிதான்.  மாணிக்கம் ஊனமுற்றவர் என்பதால் தாவா சொத்தை அவருக்கு அனுபவிக்க எனது தாத்தாவும், தந்தையும் கொடுத்து விட்டு பட்டாவும் அவர் பெயரில் மாற்றிக் கொள்ள அனுமதித்தார்கள் என்றாலும் நான் தற்போது என் தந்தை மற்றும் தாத்தாவின் விருப்பத்திற்கு மாறாக செயல்பட்டு வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை மாணிக்கத்திற்கு ஒதுக்கியதால் தான் என் தந்தை உயிரோடு இருந்தவரை எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவும் தந்தையும் மாணிக்கத்தை வீடுகட்டி குடியிருக்கவும், கேட்கும்போது வீட்டை காலி செய்து கொடுக்கவும் வேண்டும் என்று எதாவது ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. பூர்வீக சொத்தை எனது

தாத்தாவும் தந்தையும் மாணிக்கத்திற்கு குடியிருப்பதற்காக ஒதுக்கிவிட்டார்கள் என்றால் தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.